**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.73/2023**

**13.02.2026. அ.சா.2** பாடலி **த/பெ. ராஜகோபால்**

Accused absent. Petition U/s. 317 Crpc filed and allowed.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் 12ம் வகுப்பு படித்திருக்கிறேன். எங்கள் கடைக்கு "அடகு கடை "என்று தனிப்பட்ட போர்டு இல்லை என்றால் கடை முகப்பில் மேலே அடகு கடை என்று எழுதியுள்ளது. அடகு கடை வைத்துள்ளதற்கா உரிமம் பெற்ற சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எங்கள் கடையில் சிசிடிவி கிடையாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து அன்று சுமார் மாலை 4.00-4.30 மணிக்குள் சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைக்கு நானும் என் மனைவியும் என் அப்பாவை ஆட்டோவில் அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர் என் அப்பாவை பரிசோதனை செய்தார். என் அப்பாவை திருவண்ணாமலை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. எதிரி மூர்த்தி எங்கள் கடையில் போனை அடகு வைத்ததற்கும் அதை மீட்டதற்குமான ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் போலிசாரிடம் காண்பித்தேன். எதிரி என்தந்தையை தாக்கியபோது நானும் என் மனைவியும் எதிரியை தடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து 7 நாள் கழித்துதான் நான் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தேன் என்றால் சரிதான். புகார்கொடுத்த பின்பு என் கடையில் போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. எங்கள் பாத்திரக்கடையின் வேலை நேரம் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை. எனது முதல் விசாரணையில் எதிரி கடையின் எந்த திசையில் உள்ள சுவற்றில் முட்டினார் என்று சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் மனைவி கொடுத்த புகாரில் எதிரி என் தந்தையை அடித்தார் என்ற வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தற்போது சாட்சி புகாரில் அவ்வாறு உள்ளது என்று கூறுகிறார். 26.09.2022க்கு முன்போ பின்போ என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் பிரேத விசாரணை செய்த அன்று விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொன்னதுபோல் 18.09.2022 எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.